# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au


# அரையாண்டுப் பரீட்சை 2019

**ஆண்டு: 8** **திகதி: 22/06/2019**

**நேரம்: 2½ மணித்தியாலங்கள்**

**ஆசிரியர்: திருமதி. மாலினி சோமாஸ்கந்தன்**

**மாணவர் பெயர்: __________________________________**

| வினாக்கள் | புள்ளிகள் |
|---|---|
| வினா 1 | |
| வினா 2 | |
| வினா 3 | |
| வினா 4 | |
| வினா 5 | |
| மொத்தப் புள்ளிகள் | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 25 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**கீழே தரப்பட்ட பகுதியை வாசித்து தரப்பட்ட வினாக்களுக்கு முழு வசனங்களில் விடை எழுதுக.**

மக்களுக்கு மிகவும் பயன்படும் மரங்களில் யூக்கலிப்டஸ் மரமும் ஒன்று. இம்மரம் அவுஸ்திரேலியாக் கண்டத்தில்தான் தொடக்கத்தில் காணப்பட்டது. அவுஸ்திரேலியா கண்டுபிடிக்கப்பட்ட பிறகுதான் இந்த மரத்தைப்பற்றி மற்ற நாட்டினரும் அறிந்தனர். இன்று உலகத்தின் பல்வேறு நாடுகளிலும் வளர்க்கப்படும் மரமாக இந்த யூக்கலிப்டஸ் மரம் **திகழ்கிறது**. அவுஸ்திரேலியர்கள் இதைக் கோந்து மரம் என்று அழைக்கிறார்கள்.

யூக்கலிப்டஸ் மரத்தில் நூற்றுக்கணக்கான வகைகள் உண்டு. சிலவகை யூக்கலிப்டஸ் மரங்கள் அடர்ந்து **தழைத்துப்** படரும். வேறு சில மரங்கள் நேராகவும் உயரமாகவும் வளரும். இம்மரத்தின் கன்றுகளை நட்டால் ஓர் ஆண்டில் சுமார் நான்கு மீட்டர் உயரம் வளர்ந்து விடும். இம்மரம் செழித்து வளர்வதற்கு மிகுதியான தண்ணீர் வேண்டும். ஆகையால் இதைப் பெரும்பாலும் சதுப்பு நிலங்களில் பயிரிடுவார்கள். கொசுக்கள் உற்பத்தியாகும் சதுப்பு நிலங்களிலுள்ள நீரை எடுத்துக் கொண்டு விடுவதால் மலேரியாவை **ஒழிப்பதற்கு** இம்மரங்கள் பெருமளவு துணை புரிகின்றன.

இம்மரத்தின் இலைகளிலிருந்து இளம் மஞ்சள் வண்ணத்தில் ஒருவகை எண்ணெய் கிடைக்கின்றது. இதுவே நீலகிரித் தைலம் ஆகும். இதைத் தலைவலித் தைலம் என்றும் அழைப்பர். இந்தியாவில் ஆங்கிலேயர் முதன்முதலில் நீலகிரி மலையில் இதைப் பயிரிட்டனர். இதனால் நீலகிரித் தைலம் என்ற பெயர் உண்டாயிற்று. மூக்கடைப்பு, தசைப்பிடிப்பு, உடல் **நோவு** போன்ற பலநோய்களுக்கு இந்த எண்ணெய் **வியக்கத்தக்க** பலனை தரும் மருந்தாகப் பயன்படுகிறது.

1. யூக்கலிப்டஸ் மரம் முதன்முதலில் எங்கு காணப்பட்டது?

_______________________________________________

_______________________________________________

2. இம்மரம் நன்றாக வளர்வதற்குத் தேவையானது எது?

_______________________________________________

_______________________________________________

3. மலேரியாவை ஒழிப்பதற்கு இம் மரங்கள் எவ்வாறு உதவுகின்றன?

4. யூக்கலிப்டஸ் எண்ணெய்க்கு நீலகிரித் தைலம் என்னும் பெயர் உண்டாவதற்குக் காரணம் என்ன?

5. நீலகிரித் தைலத்தை மக்கள் எதற்கு பயன் படுத்துகிறார்களா?

| வினா இல | 2 | புள்ளிகள் | 20 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

**மூன்று வாக்கியங்களையும் சேர்த்து ஒரே வாக்கியமாக எழுதுக.**

1. கண்ணன் வேகமாகத் தன் அறைக்குள் நுழைந்தான்.
   அவன் அலுமாரியைத் திறந்தான்.
   அவன் சட்டையை எடுத்தான்.

   ______________________________

   ______________________________

   ______________________________

2. வாணி அதிகாலையில் எழுந்தாள்.
   அவள் காலைக் கடன்களை முடித்தாள்.
   அவள் பள்ளிக்குப் புறப்பட்டாள்.

   ______________________________

   ______________________________

   ______________________________

3. மாணவன் நூல் நிலையத்திற்குச் சென்றான்.
   அவன் ஒரு புத்தகத்தை இரவல் வாங்கினான்.
   அவன் அதைப் படித்தான்.

   ______________________________

   ______________________________

   ______________________________

4. வேலன் பேருந்து நிலையத்திற்குச் சென்றார்.
அவர் பேருந்தில் ஏறினார்.
அவர் பணிமனைக்குச் சென்றார்.

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

5. கமலா பேச்சுப் போட்டியில் பங்கேற்றாள்.
அவள் திறமையாகப் பேசினாள்.
அவள் முதல் பரிசு பெற்றாள்.

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

| வினா இல | 3 | புள்ளிகள் | 20 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் சொற்களைப் பயன்படுத்தி 5 சொற்களுக்குக் குறையாமல் வாக்கியங்கள் எழுதுக.**

1. தமிழ் மொழி

___

___

___

2. சூரியன்

___

___

___

3. கலைவிழா

___

___

___

4. பாடசாலை

___

___

___

5. சிரிப்பு

___

___

___

6. புத்தகம்

7. ஆசிரியர்

8. கடை

9. படிக்கிறேன்

10. விளையாட்டு

| வினா இல | 4 | புள்ளிகள் | 10 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

உங்களுக்கு இலங்கை அல்லது இந்தியாவில் ஒரு தோழன் அல்லது தோழி இருப்பதாகக் கருதிக் கொள்ளுங்கள். உங்களின் பாடசாலைக் கலைவிழா பற்றி அவருக்கு எழுதி, அவருடைய பாடசாலையிலும் இதேபோல் கலைவிழா நடைபெறுகிறதா என்று உங்கள் மனதில் ஏற்படும் வினாவையும் குறிப்பிட்டு 80 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கடிதம் எழுதுக.

| வினா இல | 5 | புள்ளிகள் | 25 | பக்கம் | 10 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் தலைப்பில் 150 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக.**

1. இவ்வருடம் நடைபெற்ற கலைவிழா
2. பொங்கல் விழா
3. நீர் வாசித்த அல்லது பார்த்த புத்தகம் அல்லது திரைப்படம்.